*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

*(களுபோவிலை கிளை)*
*வாடிக்கையாளரின் பெயர் : ஷாமர புஞ்சிஹேவ*

*25.04.2018 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-*

*"கடப்பாடுடையவரான ஈடுவைத்தவரான ஷாமர புஞ்சிஹேவ, வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என முன்னர் அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஐ.எஸ். விஜேசேக்கர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 11 சனவரி, 2012 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 4135 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும்;*

*பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 4135 இன்மூலம் 03.04.2018 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை இருபத்தொன்பது இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா எட்டு சதம் (ரூபா 29,63,052.08) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினெட்டு சதவீத (18%) வட்டியுடன் சேர்த்து முப்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்து நான்கு ரூபா முப்பத்தேழு சதம் (ரூபா 30,94,834.37) கொண்ட தொகை மற்றும் 02.04.2018 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;*

*சொல்லப்பட்ட தொகை முப்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்துநான்கு ரூபா முப்பத்தேழுசதம்(ரூபா 30,94,834.37)ஐ, 1990 ஆம்ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்படிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும்*

முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஈட்டு முறி இல. 4135 இன் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சோந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளை, வெலிகமை பிரதேச செயலாளர் பிரிவு, வெலிகமை நகர சபை மற்றும் ஹெட்டி வீதிய கிராம அலுவலர் பிரிவு எல்லைகளுக்குள், ஹெட்டி வீதியில் அமைந்துள்ளதும் ஹெட்டி வீதி, வெலிகமை நகர சபை வரிமதிப்பு இல. 66 ஆக இருக்கின்றதும் "அம்பலன்வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.எல்.ஏ. எம். ஹிஸாம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 26 ஒற்றோபர், 2011 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2279 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 (உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். எல். ஏ. எம். ஹிஸாம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 11.05.2011 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2162 இல் குறிப்பிடப்பட்ட) பிரித்து நிர்ணயிக்கப் பட்ட துண்டுகள் 1ஏ, 1பி மற்றும் 1சீ என அடையாளமிடப்பட்ட காணியின் மூன்று தொடர் காணித்துண்டுகளின் ஒன்றிணைப்பின் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்றதும் என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் மண் மற்றும் மரங்கள் முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு: ஓடை; கிழக்கு: ஹெட்டிவீதிய வீதி; தெற்கு: இராஜகுலவர்தன வீதி; மேற்கு: சுவர் இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 2279 இற்கு இமைய முப்பத்து நான்கு தசம் ஒன்று ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 34.19பே.) விஸ்தீரணங் கொண்டது. மாத்தறை மாவட்டக் காணிப் பதிவகத்தில் டி 1010/293, டி 1212/98 மற்றும் டி 1212/292 குறுக்கு குறிப்புடன் டி 1204/173 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

11-1673

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

10.05.2019 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது :-

1. பிரசித்த நொத்தாரிசு ஈ. டப்ளியூ.எஸ். பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 01.08.2014 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 906 இன் பேரில் கண்டி, நாகஸ்தென்ன வீதி, இல.32/C என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பொத்னவில விதானலாகே கருணாரத்ன அல்லது திரு. பொத்னவில விதானலாகே ஜயனாத் கருணாரத்ன அல்லது பொட்டேவில விதானலாகே கருணாரத்ன அல்லது பொன்னவில விதானலாகே கருனாரத்ன அல்லது மற்றும் திருமதி திசாநாயக்க முதலிகே காஞ்சனா குமாரி விஜேசிங்ஹ ஆகியோரிடமிருந்து 29.07.2018 வரை முதல் மற்றும் வட்டி ஆறு மில்லியன் நூற்று தொண்ணூற்று நான்காயிரத்து இரு நூற்றைந்து ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூபா 6,194,205.48) அத்துடன் ஐந்து மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாவில் (ரூபா 5,500,000.00) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 30.07.2018 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு ஈ. டப்ளியூ.எஸ். பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 01.08.2014 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 906 இன் பேரில் மேலதிகப்பற்று மீது ஆறு மில்லியன் நூற்று தொண்ணூற்று நான்காயிரத்து இரு நூற்றைந்து ரூபா நாற்பத்தெட்டு சதமும் (ரூபா 6,194,205.48) அத்துடன் 30.07.2018 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3 (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருனாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கண்டி மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப்பிரிவில் தெய்யன்னேவெல கிராம அலுவலர் பிரிவில் ஹபுகஸ்பிட்டியவில் அமைந்த திப்பொட்டுவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். எல். கே. ஜயசுந்தர தயாரித்த 17.05.1999 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. J1238 சரியானது J1298 இல் துண்டு 2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு - வடகிழக்கில் நாகஸ்தென்ன வீதியும், தென்கிழக்கில் டீ. குணசேன, நூர் மொஹமட் சவாஹிர் மற்றும் பீ. லெவன்கம ஆகியோர் உரிமைகோரும் பிரவேசப் பாதைக்கான ஒதுக்கமும், தென்மேற்கில் ஜமால்தீன் உரிமைகோரும் நாகஸ்தென்ன வீதி வரிமதிப்பு இல.32/5 ஐக் கொண்ட நிலமனையும், வடமேற்கில் வரைபடம் இல. J1238 மிகவும் சரியானது J1298 இல் துண்டு 1 என அடையாளமிட்ட அதே காணியின் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு ஏழு தசம் பூச்சியம் இரண்டு பேர்ச் (ஏ0. றூ0. பே7.02) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கண்டிக் காணிப்பதிவகத்தில் பக்கம் A425/250 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

எஸ். கே. கஜநாயக்க,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கண்டி மேற்தரக்கிளை.

11-1691

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் அறிவித்தல்*

2019.08.29 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு தரிந்தி காஞ்சனா அபேநாயக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்திய 2016.05.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இலக்கம் 80 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. நவோதுன்ன பல்லிய குருகே அத்தாட்சிப்படுத்திய 2014.11.13 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 3467, 2013.08.28 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 3177 மற்றும் 2011.05.11 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 2562 மீதான காலி, கோனமுல்ல சந்தி கெடோன்தொலவில் என்னும் முகவரியில் அமைந்துள்ள மகமுலான ஸ்டோஸ் உரிமையாளர் திரு. தொடம்பே கமகே பிரேமரத்ன பெற்றுக்கொண்ட கடன்வசதி மீது 2019.07.25 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வருடத்திற்கு பதினாறு வீதத்தில் (16%) மேலதிக வட்டியுடன் ஐந்து மில்லியன் நானூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு ரூபா இருபது சதம் (ரூபா 5,496,938.20) மீது 2019.07.24 ஆந் திகதியிட்ட வரையான முதலும் வட்டியுமாக ஆறு மில்லியன் இருநூற்று நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று பதினைந்து ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 6,244,215.13) தொகை வங்கிக்கு நிலுவையாக உள்ளது,

2. பிரசித்த நொத்தாரிசு தரிந்தி காஞ்சனா அபேநாயக்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்திய 2016.05.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இலக்கம் 80 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு. நவோதுன்ன பல்லிய குருகே அத்தாட்சிப்படுத்திய 2014.11.13 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 3467, 2013.08.28 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 3177 மற்றும் 2011.05.11 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கம் 2562 இன் மீது நிலுவையாக உள்ள ஆறு மில்லியன் இருநூற்று நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று பதினைந்து ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 6,244,215.13) தொகையையும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய 2019.07.25 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியுடன், செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த எம். எஸ். ரீ மற்றும் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துஷித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி காலி நகரக் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் அக்மீமனவின் நான்கு எல்லைகளுள் அக்மீமன பிரதேச செயலகப்பிரிவின் அக்மீமன பிரதேச சபை எல்லைகளுள் கெடன்தொல இல. 155 சி கிராம அலுவலர் பிரிவினுள் ஹயரே கிராமத்தில் அமைந்துள்ள வேவேல்ஹேன என அழைக்கப்படும் காணி நில அளவையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட F.V. P. 655 இன் அடையாளமிட்ட காணித்துண்டு இல. 1338

ஆம் ஒரு பாகம் வடக்கு: கிராமத்தின் எல்லை கிழக்கு : திரு. சோமசிறி விக்ரமசிங்ஹவுக்குச் சொந்தமான காணி; தெற்கு : திரு. எம். கே. ஜீ. பியசேனவுக்குச் சொந்தமான காணி; மேற்கு: திரு. எம். கே. ஜி. அல்லிஸ் அப்புஹாமிக்கு சொந்தமான காணி ஆகியவற்றினை எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே) விஸ்தீரணத்துடன் அக்காணியில் காணப்படுகின்ற மண், மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் காலிக் காணிப் பதிவகத்தில் எல். டீ. ஒ. J/07/31 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. கே. ஜி. சமரசேகர தயாரித்த 2006.01.13 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1021 இல் காணித்துண்டு A என அடையாளமிட்டு விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேற்குறிப்பிடப்பட்ட கெடன்தொல ஹயரே கிராமத்தில் அமைந்துள்ள வேவேல்ஹேன என அழைக்கப்படும் காணியின் வரைபடம் 1021 இல் அடையாளமிட்டு விபரிக்கப்பட்ட துண்டு இல. A இன் பாகம் வட-கிழக்கு: திரு. சோமசிறி விக்ரமசிங்ஹ உரிமைக்கோரும் காணி; தென்-கிழக்கு: திரு. எம். கே. ஜீ. பியசேன உரிமைக்கோரும் காணி; தென்- மேற்கு: வீதி மற்றும் திரு. கே. ஜி. அல்விஸ் அப்புஹாமிக்கு உரிமைகோரும் காணி வட-மேற்கில் வீதி மற்றும் தல்கம்பொல கிராமம் ஆகிய எல்லைகளுடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1021 இன் படி ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே) விஸ்தீரணத்துடன் அக்காணியில் காணப்படுகின்ற மண், மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

3. தென் மாகாணம், காலி மாவட்டத்தில் அக்மீமனவின் நான்கு எல்லைகளுள் அக்மீமன பிரதேச செயலகப்பிரிவின் அக்மீமன பிரதேச சபை எல்லைகளுள் கெடன்தொல இல. 155 சி கிராம அலுவலர் பிரிவினுள் ஹயரே கிராமத்தில் அமைந்துள்ள மீதெல்லதொல என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட F. V. P. 655 என அடையாளமிட்ட காணித்துண்டு இல. 2198 இன் பாகம் வடக்கு: வீதி நுழைவு; கிழக்கு: திரு. டீ. ஜி. திலதரத்னவின் காணி மற்றும் வீதி நுழைவு; தெற்கு: கெடன்தொல நெடுஞ் சாலை; மேற்கு: திரு. எச். ஜி. குமாரசிறி மற்றும் எம். கே. ஜி. கருணாதிலக்கவின் காணி ஆகியவற்றினை எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே) விஸ்தீரணத்துடன் அக்காணியில் காணப்படுகின்ற மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் காலி காணி பதிவகத்தில் எல். டீ. ஒ. J/07/32 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. கே. ஜி. சமரசேகர தயாரித்த 2000.06.11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 495 இன் காணித்துண்டு 2198 என அடையாளமிட்டு விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

ஹயரே கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டு இல. 2198 இன் பாகமாகவுள்ள மிதெல்லதொல என அழைக்கப்படும் காணியின் எல்லை வரையறுக்கப்பட்ட காணித்துண்டு 2198 இன் பிரக்கப்பட்டு எல்லை வரையறுக்கப்பட்ட காணித்துண்டு 2198 B வடக்கு: வீதி நுழைவு; கிழக்கு: டீ. ஜி. திலக்கரத்னவின் காணி 2198 A மற்றும் வீதி நுழைவு; தெற்கு: கெடன்தொல நெடுஞ் சாலை; மேற்கு: காணித்துண்டு 2197 மற்றும் 2196 ஆகிய எல்லைகளுடன் ஒரு ஏக்கர் (01ஏ. 00றூ. 00பே) விஸ்தீரணத்துடன் அக்காணியில் காணப்படுகின்ற மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) என். டி. வி. விதானபத்திரண,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
காலி நகரக் கிளை.

11-1689

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் அறிவித்தல்*

2019.09.04 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1.பிரசித்தநொத்தாரிசு டீ.வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2018.10.16 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இலக்கம் 3610 இன் பேரில் பெறப்பட்ட தவணைக்கடன் மீது 2019.08.16 ஆந் திகதி வரை வட்டியும் முதலுமாக ரூபா 3,21,29,822.14 (முப்பத்திரெண்டு மில்லியன் நூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரெண்டு ரூபா பதினான்கு சதம்) அத்துடன் 2019.08.17 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினாறு வீதப்படி (16%) ரூபா 30,000,000.00 (முப்பது மில்லியன் ரூபா) மீதான மேலதிக வட்டியும், மேற்குறிப்பிட்ட ரூபா 29,339,000.00 (இருபத்தொன்பது மில்லியன் முந்நூற்று முப்பத்தொன்பது ஆயிரம் ரூபா) தவணைக்கடனின் தீர்க்காத முதல் மீதான மேலதிகவட்டியும் இல. 43/17C, சுரம்யா மாவத்தை, பமுணுவ, மஹரகம என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட நமித் என்ரபிரைசஸ் தனியார் நிறுவனத்திடமிருந்து வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. குறித்த 3610 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது மேற்குறிப்பிட்ட வருமதியாக உள்ள ரூபா 3,21,29,822.14 (முப்பத்திரெண்டு மில்லியன் நூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரெண்டு ரூபா பதின்நான்கு சதம்) அத்துடன் 2019.08.17 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் ரீ. அன்ட் எச். ஒக்ஷன்ஸ், திரு. எம். எச். ரீ. கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தலைநகரக் கிளை (அறவிடல் மற்றும் கடன் கண்காணிப்பு) முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**1 ஆம் அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் மஹரகம பட்டினசபை எல்லைக்குட்பட்ட மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் 421 எர்ரவ்வல கிராம அலுவலர் பிரிவில் பமுணுவயில் அமைந்த சுச்சரித்தோடய வீதி, வரிமதிப்பு இல. 43/17C யைக் கொண்ட மில்லகஹவத்த என அழைக்கப்படும் துய்யாவத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ தயாரித்த 2016.02.17 ஆந் திகதியிடப்பட்ட 5683 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B1A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு வடக்கு: டீ. சீ. கட்டுகம்பொல மற்றும் ஏனையோரின் காணியையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 1972.11.05 ஆந் திகதியிட்ட 940 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள B6 இலக்க காணியையும்; கிழக்கு: மேற்குறித்த உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 940 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள B6 மற்றும் B5 இலக்க காணித்துண்டுகளையும் ; தெற்கு : மேற்குறித்த உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 940 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள B5 மற்றும் B2 இலக்க காணித்துண்டுகளையும் வசந்தி மற்றும் ஏனையோர்களின் காணியையும்; மேற்கு: மேற்குறித்த உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 940 ஆம் இலக்க வரைபடத்தில் வபரிக்கப்பட்டுள்ள B6 இலக்க காணித்துண்டையும் வசந்தி மற்றும் ஏனையோர்களின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேற்குறித்த 5683 ஆம் இலக்க வரைபடத்தின் படி பதினேழு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றூ. 17.50பே) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு நான்கு மூன்று ஹெக்டெயர்கள் (0.0443) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி காணிப்பதிவகத்தில் பக்கம் B472/91 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அடையாளமிட்ட குறித்த காணித்துண்டு B1A பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறித்த பமுணுவயில் அமைந்த சுச்சரித்தோடய வீதி, வரிமதிப்பு இல. 43/ 17C ஐக் கொண்ட மில்லகஹவத்த என அழைக்கப்படும் துய்யாவத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 1972.11.05 ஆந் திகதியிட்ட 940 ஆம் இலக்க வரைபடத்தில் (ஆனால் 1972.11.02 எனப் பதிவுசெய்யப்பட்ட) விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு B1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு வடகிழக்கு: B6 இலக்க காணித்துண்டையும்; தென் கிழக்கு: B5 மற்றும் B2 ஆம் இலக்க காணித்துண்டையும்; தென்மேற்கு: ஏ. ஏ. எமலின் பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் ஆதனத்தையும்; வடமேற்கு: தோமஸ் பெரேரா என்பவரால் உரிமை கோரப்பட்ட ஆதனத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேற்குறித்த 940 ஆம் இலக்க வரைபடத்தின் படி பதினேழு தசம் ஐந்து பூச்சியம் பேரச் (00ஏ. 00றூ. 17.50பே) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் பக்கம் B373/127 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**2 ஆம் அட்டவணை**

மேற்குறித்த பமுணுவயில் அமைந்த மில்லகஹவத்த என அழைக்கப்படும் துய்யாவத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜீ. சீ. டயஸ், தயாரித்த 1972.11.05 ஆந் திகதியிட்ட 940 ஆம் இலக்க வரைபடத்தில் (ஆனால் 1972.11.02 எனப் பதிவுசெய்யப்பட்ட) விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B5 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு வடகிழக்கு: B6, B7 மற்றும் B8 இலக்க காணித்துண்டையும்; தென்கிழக்கு: பாதையும்; தென்மேற்கு: B4, B3 மற்றும் B2 இலக்க காணித்துண்டுகளையும்; வட மேற்கு: B4 இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேற்குறித்த 940 ஆம் இலக்க வரைபடத்தின் படி ஒன்பது தசம் இரண்டு பேர்ச் (00ஏ. 00றூ. 9.2பே) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி தெல்கந்த காணிப்பதிவகத்தில் பக்கம் B412/57 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டப்ளியூ. எம். எச். ஏ. எஸ். எஸ். பீ. ஏகநாயக்க,
முகாமையாளர்.
(அறவிடல் மற்றும் கடன் கண்காணிப்பு)

இலங்கை வங்கி,
தலைநகரக் கிளை,
2019, செத்தெம்பர் 30.

11-1692

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் அறிவித்தல்*

2019.09.04 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு ஜி. சி. பி. திலகரத்ன அத்தாட்சிப்படுத்திய 2007.07.16 ஆந் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 3196, பிரசித்த நொத்தாரிசு என். ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2011.02.15 ஆந் திகதிய ஈட்டுமுறி இல. 1217 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம். டி. ஐ. கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2015.05.15 ஆந் திகதிய ஈட்டுமுறி இல. 1176 என்வற்றின் பேரில் முதலாவது கடன் மீது 2019.07.02 வரையான வட்டியும் முதலுமாக (1,706,895.23 ) ரூபா (ஒரு மில்லியன் எழுநூற்று ஆறாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து ரூபா இருபத்து மூன்று சதம்) அத்துடன் 2019.07.03 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு நான்கு வீதப்படி (4%) 1,430,029.61 ரூபா (ஒரு மில்லியன் நாநூற்று முப்பதாயிரத்து இருபத்தொன்பது ரூபா அறுபத்தொரு சதம்) மீதான மேலதிக வட்டியும் இரண்டாவது கடன் மீது 2019.07.02 வரையான வட்டியும் முதலுமாக 3,782,977.80 ரூபா (மூன்று மில்லியன் எழுநூற்று எண்பத்திரண்டாயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா எண்பது சதம்) அத்துடன் 2019.07.03 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதின்மூன்று வீதப்படி (13%) 3,340,000.00 ரூபா (மூன்று மில்லியன் முந்நூற்று நாற்பதாயிரம் ரூபா) மீதான மேலதிக வட்டியும் மூன்றாவது கடன் மீது 2019.07.02 வரை வட்டியும் முதலுமாக 4,437,566.71 ரூபா (நான்கு மில்லியன் நாநூற்று முப்பத்தேழாயிரத்து ஐந்நூற்று அறுபத்தாறு ரூபா எழுபத்தொரு சதம்) அத்துடன் 2019.07.03 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பன்னிரண்டு வீதப்படி (12%) 4,234,440.86 ரூபா (நான்கு மில்லியன் இருநூற்று முப்பத்து நான்காயிரத்து நாநூற்று நாற்பது ரூபா எண்பத்தாறு சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 23/ 1, நீர்கொழும்பு வீதி மினுவாங்கொடை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கனிஹி அச்சி தொன் நிலுக் அன்ரன் ரொஷான் வர்ணகுலசூரிய என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. 2007.07.16 ஆந் திகதிய ஈட்டுமுறி இலக்கம் 3196, 2011.02.15 ஆந் திகதிய ஈட்டுமுறி இல. 1217, 2015.05.15 ஆந் திகதிய ஈட்டுமுறி இல. 1176 என்பவற்றின் மீது முதலாவது கடனின் பேரில் வழங்கப்பட்ட 1,706,895.23 ரூபா (ஒரு மில்லியன் எழுநூற்றாறாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற் றைந்து ரூபா இருபத்து மூன்று சதம்) இரண்டாவது கடனின் பேரில் வழங்கப்பட்ட 3,782,977.80 ரூபா (மூன்று மில்லியன் எழுநூற்று எண்பத்திரண்டாயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா எண்பது சதம்) மூன்றாவது கடனின் பேரில் வழங்கப்பட்ட 4,437,566.71 ரூபா (நான்கு மில்லியன் நாநூற்று முப்பத்தேழாயிரத்து ஐந்நூற்று அறுபத்தாறு ரூபா எழுபத்தொரு சதம்) அத்துடன் 2019.07.03 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. அன்ட் எச். ஒக்ஷன்ஸ், ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மினுவாங்கொடைக் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை தசியபற்று மினுவாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நகர சபை எல்லைக்குள் உள்ள மினுவாங்கொடை மத்தி (125) கிராம அலுவலர் பிரிவில் நீர்கொழும்பு வீதியிலுள்ள பொரகொடவத்தையில் அமைந்துள்ள "அம்பகஹவத்தை" என அழைக்கப்படும் 23/ 3 என்ற மதிப்பீட்டு இலக்கம் கொண்ட காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஜி. என். சந்தகிரி தயாரித்த 2006.07.07 ஆந் திகதிய 1420 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணி குறித்த 1420 ஆம் இலக்க வரைபடத்துக்கமைய- வடக்கு : நகரசபை வீதியையும் 7872 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 1 ஐயும் ; கிழக்கு : 7872 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2 ஐயும் 1848 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 6 ஐயும் ; தெற்கு : 1848 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 6 ஐயும் காணித்துண்டு 2 ஐயும் ; மேற்கு : நகர சபை வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இது பதினான்கு தசம் ஏழு ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.14.79பே.) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் மண், கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என்பவற்றையும் கொண்ட இக்காணி கம்பஹா காணிப் பதிவகத்தில் பக்கம் K258/86 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) பி. வி. பி. ஷாமலி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மினுவாங்கொடை கிளை.

11-1690

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம்: 2293234 மற்றும் 2293258
இந்திக ஏரந்த பண்டார லியனகே

2019.10.25 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"கடன் எடுத்த இந்திக ஏரந்த பண்டார லியனகே, கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக அநுராதபுர பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. ஆர். உதயங்கவின் 2016.09.13 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 98 மற்றும் 2016.11.29 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 118 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 2019.09.19 ஆந் திகதி வரை ரூபா 22,887,652.46 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கங்கள் 98 மற்றும் 118 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்படுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை சொல்லப் பட்ட பணத்தொகையான ரூபா 25,887,652.46 வுடனும், 2019.09.20 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 23,301,600.00 பணத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு 15.5% சத வட்டியும், விளம்பரச் செலவுகள் வேறு கொடுப் பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு-12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2வது மாடியில் உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

## மேற் சொல்லப்பட்ட அட்டவணை

வட மத்திய மாகாணம், அநுராதபுரம், நுவரகம் பலாத்த மாவட்டச் செயலாளர் எல்லையில் நந்தர கோரளை, அநுராதபுர நகர சபை எல்லையில் இலக்கம் 23E, கிராம அலுவலர் தொகுதியில், அநுராதபுர புதிய நகரம் தெகுதி - II, பண்டாரநாயக்க மாவத்தை, கட்டிடம் இலக்கம் 270 இல் உள்ள வன்னியன்குலமகெலே காணிக்கு நில அளவையாளர் ஏ. எம். பி. இரத்தினபுரி 20.06.2016 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 7657 இல் காண்பிக்கப்பட்ட லொட் 01 இன் எல்லைகள் வடக்கு : FVP 23 இல் லொட் 2732 ; கிழக்கு : FVP 23 இல் லொட் 2729 ; தெற்கு : FVP 23 இல் லொட் 2731 ; மேற்கு : FVP 43 இல் லொட் 2727 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 3.36பே.) மேற்படி வரைபட இலக்கம் 7657.

மேற் சொல்லப்பட்ட காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடத்தின் படி பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி அநுராதபுரம், புதிய நகரம் தொகுதி II கட்டிட இலக்கம் 270 பண்டாரநாயக்க மாவத்தையில் உள்ள வன்னியன்குலமகெலே காணியின் நில அளவையாளர் டி. பி. ஆரியசேனவின் 1993.05.10 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 27/93 இல் காண்பிக்கப்பட்ட லொட் 01 இன் எல்லைகள் - வடக்கு: FVP 23 இல் லொட் 2732 ; கிழக்கு : FVP 23 இல் லொட் 2729 ; தெற்கு : FVP 23 இல் லொட் 2731 ; மேற்கு : FVP 23 இல் லொட் 2727 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 3.36பே.) மேற்படி வரைபட இலக்கம் 7657. இக்காணி அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் D18/29 இல் பதிவு செய்யப்பட்ட காணியாகும்.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2019, நவெம்பர் 07.

11-1638

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.